இருக்கிறது என்பதையும், டில்லியில் வந்து இறங்குகிற பயணி களுக்கு உதகையைப் பார்த்துச் செல்வதற்காக என்ன திட்டம் செய்யப்பட்டு இருக்கிறது என்பதையும் தெரியப்படுத்த வேண்டு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : உதகையைப் பற்றி அழ கான வண்ணச் சுவரொட்டிகள் அமைக்கப்பட்டு வெளிநாடு களுக்கு அனுப்பப்படுகின்றன. அந்தச் சுவரொட்டிகள் அந்நாட்டு சுற்றுலா பயணிகளுக்காக வெளிநாட்டில் ஒட்டப்பட்டு பிரச்சாரம் செய்யப்படுகிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்–விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) கவன ஈர்ப்பு.

மதுரை செந்தமிழ் ஓரியண்டல் கல்லூரி மூடப்பட்டது குறித்து.

Mr. SPEAKER : Thiru K. T. K. Thangamani and Thiru P. Malaichamy hvae given a calling attention notice under Rule 41 of the Assembly Rules.

Thiru K. T. K. THANGAMANI : Mr. Speaker, Sir, under Rule 41 of the Tamil Nadu Legislative Assembly Rules I call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the proposal to abolish the Senthamil College, Madurai which is an affiliate of the Madurai University and the consequent hardships to staff and students and loss of prestige to the City with 15 years of continued existence to the Institution. I request that he may be pleased to make a statement thereon.

திரு. பெ. மலைச்சாமி : மதுரைப் பல்கலைப் கழகத்துடன் இணைந் துள்ள மதுரை செந்தமிழ்க் கல்லூரியை எடுத்துவிடப்பட வேண்டும் என்று எழுதியுள்ளதன் விளைவாக மேற்படி கல்லூரிப் பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடர்ப்பாடு ஏற்பட் டிருப்பதும், இந்நகரில் தொடர்ந்து 15 ஆண்டு காலமாக இருந்து வருகின்ற இக்கல்லூரி எடுத்துவிடப்படுவதனால் நகரின் மதிப்புக்கு இழுக்கு ஏற்படுவதும் குறித்து அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத் துக்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரையிலுள்ள செந்தமிழ் ஓரியண்டல் கல்லூரி மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பட்டு வருகிறது. செந்தமிழ் ஓரியண்டல் கல்லூரி மதுரைப் பல்கலைக்கழகத்துடன் 1957-முதல் இணைக்கப்பட்டுள்ளது.

1971 ஜூன் 29] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இக்கல்லூரி தமிழ்ச் சங்கத்தின் எல்லைக்குள் இயங்கி வருகிறது. செந்தமிழ்க் கல்லூரியும் இத்துடன் இணைந்து சங்க எல்லைக்குள் இயங்கி வருகிறது. செந்தமிழ் ஓரியண்டல் கல்லூரி மாணவர்களிடமிருந்து சம்பளம் வசூல் செய்யவில்லை. தமிழ்ச் சங்கம் மூன்றில் இரண்டு பகுதி பற்றுக்குறையை கல்வி மானியமாகப் பெற்று வருகிறது. 1968-69-ல் தமிழ்ச் சங்கம் செந்தமிழ் கலைக் கல்லூரியைப் பெண்களுக்காகத் துவக்கியது. அக் கல்லூரியையில் புகுமுக வகுப்பில் தமிழ் சிறப்புப் பாடமாகவும், பி.ஏ. பட்டப்படிப்பில் ஒருபகுதியாக தமிழையும் கொண்டு இயங்கியது. மேற்கூறிய இரு கல்லூரிகளும் ஒரே இடத்தில் இருந்தமையால், இட நெருக்கடி ஏற்பட்டது. இது தவிர மாணவர்களிடையே ஒழுக்கக் குறைவான நடவடிக்கைகளைத் தமிழ்ச் சங்கம் சந்திக்க நேரிட்டது. அரசிடமிருந்து மூன்றில் இரண்டு பங்கு மானியம் பெற்ற போதிலும், ரூ. 20,000 வரை நிர்வாகத்தினருக்கு ஏற்று நடத்துமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஓரியண்டல் கல்லூரிக்கு 1968-69 முதல் மாணவர்களைச் சேர்ப்பதை நிறுத்தி விட்டனர்; 1968-69 முதல் சேர்க்கப்பட்ட மாணவர்கள் ஏப்ரல் 1971-ல் படிப்பை முடித்துவிட்டனர்.

இவ்வாறு நிர்வாகத்தினர் 1968-69-லேயே படிப்படியாக கல்லூரியை மூடிவிட முடிவு செய்து விட்டனர். ஆயினும், ஏப்ரல் 1971-ல் கடைத் தொகுதி மாணவர்கள் தங்கள் படிப்பை முடிக்கும் தருவாயில் நிருவாகத்தினர் ஓரியண்டல் கல்லூரி ஊழியர்களுக்கு, அவர்களது பணி இனி தேவையிராது என 1970 மே மாதத்திலேயே அறிவிப்பு கொடுத்து விட்டனர். ஊழியர்கள் தங்களது பணியை முடிக்க வேண்டாமென்று நிருவாகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்தனர். அவர்கள் ஓரியண்டல் கல்லூரிக்கு மாற்று இடம் தருவதாகவும் 1970-71 முதல் வித்துவான் படிப்பை தொடருமாறும், நிருவாகத்தினரைக் கேட்டுக்கொண்டனர். அவர்களது இக் கோரிக்கை நிருவாகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஜூன் 1970-ல் இரண்டாமாண்டு வித்துவான் படிப்பிற்கு 27 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். மாற்று இடம் வாடகைக் கட்டடங்களிலேயே தனியாக அமைக்கப்பட்டது. இந்த 27 மாணவர்களும் இன்னும் தங்கள் படிப்பை முடிக்கவில்லை. அவர்கள் இரண்டாண்டு படிப்பை தொடர்ந்து படிக்க அனுமதிக்கப்படுவர் என நிருவாகத்தினர் கூறி உள்ளனர். எனவே, கல்லூரியை மூடிவிடல் என்ற நிருவாகத்தினரின் எந்த முடிவினாலும் இந்த மாணவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள்.

ஓரியண்டல் கல்லூரி மாணவர்கள், அக்கல்லூரியை அரசே ஏற்று நடத்துமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். மாநில அரசு எந்த ஓரியண்டல் கல்லூரியையும் ஏற்று நடத்தவில்லை. இயங்கிவரும் எல்லா ஓரியண்டல் கல்லூரிகளும் தனியார் துறையினராலேயே நடத்தப்படுகின்றன. எனவே, இக் கல்லூரியை மாநில அரசு ஏற்று நடத்துதல் என்ற கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நிதிப்பற்றுக்குறை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நிதிப் பற்றுக்குறை செந்தமிழ் கல்லூரிக்கு இல்லை. இப்போது கூட ஒரு லட்சம் ரூபாய் இதற்கு நிதி இருப்பதாக கூறப்படுகிறது. எனவே இப்போது நிர்வாகத்தை மாற்றி புதிய நிர்வாகத்தை அமைத்தால் நிச்சயமாக செந்தமிழ் கல்லூரி இயங்க வாய்ப்பு இருக்கிறது, என்பதை அரசு உணர்ந்து வேறு நிர்வாகத்தை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கழக உறுப்பினர் கோருகிற மாற்றத்தை மதுரை தமிழ் சங்க விதி முறைகளுக்கு உட்பட்டுத்தான் செய்ய இயலும். இப்போது உள்ள நிர்வாகத்தை அரசு மாற்றுவது என்பது இயலாது. தமிழ் சங்கத்தின் விதி முறைகள் அந்த அடிப்படையில் அமைந்திருக்கின்றன. அதை மாற்றவேண்டும். அதை மாற்றுவதற்கான சூழ்நிலையை கழக உறுப்பினர் செய்வார் என்று நம்புகிறேன்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1971-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச்சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட-முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) 1971-ம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதிமன்ற (திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதிமன்ற (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.